இந்துசமய அறநிலையத்துறை

# யானைகள் சிறப்பு நலவாழ்வு முகாம் 2017–18

தேக்கம்பட்டி – மேட்டுப்பாளையம்

மின்னஞ்சல் : elephantcamp@tnhrce.org
தொலைபேசி எண்: 04254–297981

நாள் 31.01.2018

கோவை மாவட்டம், மேட்டுப்பாளையம் வட்டம், தேக்கம்பட்டி அருள்மிகு வனபத்ரகாளியம்மன் திருக்கோயில் அருகிலுள்ள பவானி ஆற்றுப்படுகையில் நடைபெற்று வரும் யானைகள் சிறப்பு நலவாழ்வு முகாமில் யானைகள் வழக்கம் போல் நடைபயிற்சி மேற்கொண்டு பூவாளி குளியல் மேடையில் ஆனந்தமாய் நீராடி காலை உணவு மற்றும் சத்து மாத்திரைகள் உண்டு தமது இடங்களுக்கு சென்று ஓய்வெடுக்கத் துவங்கின.

பசுந்தீவனம், சாத உருண்டைகள், கேழ்வரகு களி, பச்சைப்பயிறு ஆகியவற்றுடன் உடலுக்கு வலுவூட்டும் சத்து மாத்திரைகள் மருத்துவர் ஆலோசனையின்படி கேரட், பேரீட்சை, பீட்ரூட், அவல் ஆகியவற்றை உட்கொண்ட யானைகள் மாலையிலும் வழக்கம் போல் நடைபயிற்சி செய்து நீராடி தத்தம் இடங்களுக்குச் சென்று ஓய்வெடுக்கத் தொடங்கின.





இன்று மதியம் 12.30 மணியளவில் திருச்சி, திருவானைக்காவல் அருள்மிகு ஜம்புகேஸ்வரர் திருக்கோயிலின் யானை அகிலாவின் பாகன் திரு.ஜம்புநாதன் அவர்களுக்கு நெஞ்சுவலி ஏற்பட்டதால் 108 ஆம்புலன்சில் மேட்டுப்பாளையம் மருத்துவனைக்கு அவசரச் சிகிச்சைக்கு அனுப்பப்பட்டார். மேலும் தீவிர சிகிச்சை தேவைப்படலாம் என

மருத்துவர் அறிவுரை வழங்கியதால் கோவை ராயல்கேர் பல்நோக்கு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு தீவிர கண்காணிப்பில் வைக்கப்பட்டு சிகிச்சை நடைபெற்று வருகிறது. தற்போது அபாய கட்டத்தை தாண்டிவிட்டதாக மருத்துவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.